25th March 1963]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தமிழ் ஆசிரியர்கள் கல்லூரித் தலைவ ராகக்கூட தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். பொதுவாக ஹெட்மாஸ்டர், பிரின்ஸிபால் போன்ற தலைவர் ஸ்தானத்திற்கு எல்லாத் தகுதிகளையும் பார்த்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** பழைய ஜில்லா போர்டு பணியாளர் களுக்கு அரசாங்கப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள் கொடுக்கப்பட்டதா ? இல்லையென்றால் கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனிக் கேள்வி போடவேண்டும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** ஸார், மாவட்ட கலெக்டர் நிர்வகிக்கும் போது இருந்த டிஸ்ட்ரிக்ட் போர்டு எஜுகேஷன் ஆபீசர்களுக்கு, ஸ்பெஷல் டி.இ.ஓ.க்கள் நியமிக்கும் போது முதலிடம் கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பே சொன்னேன். மாவட்ட கல்வி அதிகாரிகளில் சிலர் இந்த விசேஷ கல்வி அதிகாரிகளாக நியமிக்கப் பட்டுள்ளார்கள், வேறு சிலர் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று.

**திரு. சா. ராமசாமி :** உயர் நிலை பள்ளிகளில் ஆசிரியர்களிடையே ஏதா வது குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டால், விவரமாக கலெக்டரிடம் குறைகளை எடுத்துப் பேச சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கப் பட்டிருக் கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எப்பொழுதும் சட்டமன்ற உறுப்பினர் கள் கல்வி அதிகாரிகளிடமும் கலெக்டர்களிடமும் பொதுவான கருத்துக் களை, குறைபாடுகளை தெரிவிக்கலாம். ஆனால், குறிப்பிட்ட அதிகாரியை இங்கே மாற்றவேண்டும்,, அங்கே மாற்றவேண்டும் என்று கோரக் கூடாது. பொதுவாகச் சொல்லலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்கள் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களை அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அதைத் திரும்பவும் கலெக்டர்களிடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யப் படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த மன்றம் இயற்றிய சட்டப்படி ஆரம்பப் பள்ளிகளில் மேற்பார்வை பார்க்கும் பொறுப்பு பஞ்சாயத்து யூனியன்களிடம் இருக்கிறது. அதை மாற்ற முடியாது.

**புலவர் கா. கோவிந்தன் :** பானல் ஆப் ஹெட்மாஸ்டர்ஸ் தயாரிக்கும் போது, மாவட்டக் கழகப் பள்ளி எல்.டி.கள் மட்டும் எடுக்கப் படுகிறார்கள். தனியார் பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்கள் சேர்க்கப்படுவதில்லை. ஆகவே, அவர்களையும் சேர்க்கும் முறையில் எல்லா பள்ளிகளுக்கும் பொது வான பேனல் தயாரிக்க சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் சொல்லும் முறையை ஏற்றுக்கொள்வது முறையல்ல என்று கருதுகிறேன்.

## ஆயுள் தண்டனை குறைப்புப் பரிசிலனை குழு

* 370 கேள்வி.—**திரு. இரா. நாராயணன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆயுள் தண்டனைப் பெற்ற கைதிகளுடைய தண்டனையைக் குறைக்கப் பரிசிலனை செய்யும் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ள உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.